செ.வெ.எண்: 22 /ஆகஸ்ட் / 2019

நாள்:13.08.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் வருகின்ற (26.08.2019) முதல் (14.09.2019) வரை மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப அவர்கள் தகவல்.

***************

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (சமக்ரா சிக்ஷா) சார்பில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான இலவச மருத்துவ முகாம் அனைத்து வட்டார வளமையங்களிலும் 26.08.2019 முதல் 14.09.2019 வரை நடைபெற உள்ளது. இது குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் **திரு.சு.சிவராசு இ.ஆ.ப** அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு.

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு உள்ளடங்கிய கல்வி அளிப்பதில் உடல் மற்றும் மனதளவில் எந்தவித தடையும் இருத்தல் கூடாது என்பதற்காக ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்கத்தின் சார்பில் இந்த குழந்தைகளுக்கு இலவச மருத்துவ முகாம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவருகிறது. அரசு சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு வட்டார வளமையங்களில் 26.08.2019தேதி முதல் 14.09.2019தேதி வரை நடைபெறும், இந்த மருத்துவ முகாமில் பிறப்பு முதல் 18 வயதுடைய அனைத்து மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளும் கலந்து கொள்ளலாம்.

மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் தேவையைப் பொறுத்து தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை ஆலோசனைகள், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை, UDID அட்டை பதிவு செய்தல் போன்றவை இலவசமாக அளிக்கப்படும். முகாமில் கலந்து கொள்ளும் குழந்தைகளில் புதியதாக தேசிய அடையாள அட்டை பெற விரும்புவோர் குழந்தையின் புகைப்படம், குடும்ப அட்டை நகல், பிறப்புச்சான்றிதழ், ஆதார் அட்டை கொண்டுவர வேண்டும். உதவி உபகரணங்கள் பெற தேவையுள்ளோர் பெற்றோரின் வருமானச்சான்றிதழ், காப்பீட்டு அட்டை முதலியன கொண்டுவர வேண்டும். முகாமில் கலந்துகொள்ளும் குழந்தைகளுக்கு பயணப்படியும், உணவும் வழங்கப்படும். எனவே பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சுயஉதவி குழுவினர் மற்றும் தன்னார்வலர்கள் முகாமில் எந்த குழந்தைகளும் விடுபடா வண்ணம் கலந்து கொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>மருத்துவ முகாம் நடைபெறும் இடங்கள் பற்றிய விபரம்</u>

| வ.எண் | இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தேதி மற்றும் நாள் | | ஒன்றியங்களின் பெயர் | மருத்துவ முகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 26.08.2019 | திங்கள் கிழமை | திருச்சி நகரம் | எஸ்.எம் மேல்நிலைப் பள்ளி, உறையூர் |
| 2 | 27.08.2019 | செவ்வாய்க் கிழமை | இலால்குடி | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், இலால்குடி |
| 3 | 28.08.2019 | புதன் கிழமை | திருவெறும்பூர் | அரசு ஆதிதிரவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், திருவெறும்பூர் |
| 4 | 29.08.2019 | வியாழக் கிழமை | மருங்காபுரி | அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், கோவில்பட்டி |
| 5 | 30.08.2019 | வெள்ளிக் கிழமை | அந்தநல்லூர் | ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வளாகம், முத்தரசநல்லூர் |
| 6 | 31.08.2019 | சனிக் கிழமை | மணிகண்டம் | அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், சோமரசம்பேட்டை |
| 7 | 03.09.2019 | செவ்வாய்க் கிழமை | மணப்பாறை | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், மணப்பாறை |
| 8 | 04.09.2019 | புதன் கிழமை | மண்ணச்சநல்லூர் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், மண்ணச்சநல்லூர் |
| 9 | 05.09.2019 | வியாழக் கிழமை | தொட்டியம் | அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், பாலசமுத்திரம் |
| 10 | 06.09.2019 | வெள்ளிக் கிழமை | துறையூர் | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், துறையூர் |
| 11 | 07.09.2019 | சனிக் கிழமை | உப்பிலியபுரம் | அரசு மேல்நிலைப் பள்ளி, உப்பிலியபுரம் |
| 12 | 09.09.2019 | திங்கள் கிழமை | புள்ளம்பாடி | அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், புள்ளம்பாடி |
| 13 | 11.09.2019 | புதன் கிழமை | திருச்சி மேற்கு | ஆர்.சி.மேல் நிலைப் பள்ளி, கண்டோன்மென்ட் |
| 14 | 12.09.2019 | வியாழக் கிழமை | முசிறி | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், முசிறி |
| 15 | 13.09.2019 | வெள்ளிக் கிழமை | வையம்பட்டி | அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி வளாகம், வையம்பட்டி |
| 16 | 14.09.2019 | சனிக் கிழமை | தா.பேட்டை | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம், தாத்தையங்கார்பேட்டை |

செய்தி வெளியீடு:

13/8/2019

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.